உ

சிவமயம்



யாழ்ப்பாணம் வடமராட்சிப்பகுதி
கட்டைவேலி கோயிற்பற்றைச் சேர்ந்த
துன்னையம்பதி வாசரும்
உயர்தவச் சைவ
வேளாண்குலத்திலுதித்தருமாகிய

# திருமதி பொன்னம்மா மூத்ததம்பி

அவர்களது அமரத்துவ

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி பொன்னம்மா மூத்ததம்பி



தோற்றம்
1914.12.28

மறைவு
1998.03.17

திதி நிர்ணய வெண்பா

மன்னும் ஈசுரவருடம் மாண்புமிகு பங்குனியில்
பின்னுதிரி அபரபக்கச் சதுர்த்தியதில் – மின்னுபுகழ்
உத்தமியாள் பொன்னம்மா உயர்கயிலை வெற்பிலுறை
அத்தனடி சார்தினமே சாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மா நிலத்தே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலைய னேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெரு மானே
இம் மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினி யே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்ட னேன் இசையுமா றிசையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய் மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண் மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பாரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவாகம சுந்தரிபூங் கழல் போற்றி.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## ஆழ்வார் பாடல்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந் தேயென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடும் தெய்வத் துதிப் பாடல்

### கொட்டிக் குளிப்பான் பிள்ளையார் துதி

தந்தைதாய் தானுலகம் என்னுமுயர் ஞான
 தத்துவத்தை உலகினுக்கே நிலைநாட்டி
விந்தையுறு மாங்கனியைப் பெற்றுநின்ற
 விளங்கு கொட்டிக் குளிப்பான் விநாயகரே
சிந்தையெல்லாம் உன் நினைவே நிறைந்து
 சீறடியே தவறாது போற்றி நின்றேன்
முந்தை வினைப் பயன்போக்கி யாட் கொள்வாய்
 மூஷிகவா கனனேநின் னடிபோற்றி.

### துன்னாலை தெற்கு பூதவராயர் (சிவபெருமான்) துதி

சிரம் மீது பிறைசூடிக் கங்கையோ டரவம் பூண்டு
கரந்தனிலே சூலமேந்திக் கனிவோடு அருள் பொழியும்
புரமெரித்த தென்னுன்னை பூதவரா யத் தேவே
அரவணைத்தே நின்பாத அடியினையே அருளுவையே.

### அத்துளு அம்பாள் துதி

பற்றையும் படர்செடியும் பரவுமா வரசு எல்லாம்
 படருமோர் அத்துளுவில் பரிவுடன் கோயில் கொண்ட
கொற்றமார் கோதையெங்கள் குலமணி அம்பாள் தாயே
 குங்குமஞ் சூடுமெங்கள் மங்கல வடிவே அம்மா
நற்றவம் நோன்பு ஆற்றி நாடியே பொங்கலிட்டு
 நாளுமே போற்றிநின்ற நாயினேன் உலக வாழ்வின்
பற்றினை அறுத்து உந்தன் பாதார விந்தம் தேடிப்
 பற்றவே ஓடிவந்தேன் பவவினை அறுப்பாயம்மா.

### செல்வச் சந்நிதி முருகன் துதி

அன்றொருநாள் அவ்வைக்குச் சுட்டகனி கொடுத்தாண்டாய்
மன்றுபடை பிரமனையே மறைகேட்டுச் சிறையளித்தாய்
குன்றனைய சூரனுடல் கூறாக்கிப் பதமளித்தாய்
என்றனையும் நின்னிருதாள் நிழலிருத்தி ஆள்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர ஆழ்வார் துதி

நாராயணா எனும்நாமம் என்நாவில் மறவாது
ஆராதனை செய்தேன் அரிஓம் நமோ நமவென்றே
பேரா யிரம் கூறி பெரிதுமுறை வேண்டி நின்றேன்
வாரா திடக் காத்து வைகுந்தம் சேர்க்குதியே.

## பிறத்திசங்கிலி காளிதேவி துதி

ஊரினிலே உலவுபிணி நோய்தீரின்றி
ஊர்காவற் தெய்வமென விளங்குகின்ற
பார்புகளும் பிறத்திசங்கிலி காளித் தாயே
பக்தியொடு நாளுமுனை வணங்கியே
ஆர்வமுடன் பொங்கலிட்டு மடையும் சாத்தி
அடியினையே பணிந்துநின்றேன் அம்மாஎந்தன்
ஓராது செய்தவினை ஓட்டியுந்தன்
உயர்பாத நிழலீந்து அருளுவாயே

## குலதெய்வம் முனியப்பர் துதி

செங்கண்ணுஞ் செஞ்சடையும் சீற்றநோக்கும்
பொங்குவக் கிரதந்த வாயுங்கொண்டு
எங்கள்குலம் காத்துநிற்கும் முனியப்பாவே
தங்குமுந்தன் தாளினையே சரண மப்பா

## இரங்கற்பாக்கள்

மூத்தமகள் பரமேஸ்வரி ,யோகேஸ்வரன் (விசுவமடு)பிரலாபம்

கண்ணுக்குக் கண்ணாக் காத்துஎனை வளர்த்தெடுத்து
கலையூட்டிக் கண்ணிறைந்த கணவரையும் சேர்த்துவைத்து
எண்ணரிய பாசமொடு என்னோடு இணைந்திருந்தாய்
என்னரிய தாயாரே அம்மாநான் இடம்பெயர்ந்து
வன்னிக்குச் சென்றுவிட்ட வருத்தத்தின் சாயலிலோ
வந்துன்னைக் காணவில்லை எனும்ஏக்கம் குடிகொண்டோ
எண்ணியிரா வேளையிலே எமனுன்னைக் கொண்டுசென்றான்
ஏதுமறி யாதிங்கே இருந்தாற்ற ஒருவிதியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் கணேசமூர்த்தி புலம்பல் (பிரதேசசபை நெல்லியடி)

நினைத்திடவே நெஞ்ச மெல்லாம் பதறுதம்மா, நின்வதனம்
நிழலாடி என்னகத்தைப் பிளக்குதம்மா, எனக்காக
நினைந்து நினைந் துருகிடுவாய் நின்கவலை நானறிவேன்
நினதுமனம் கவலையுற ஒருகுறையும் இன்றியே
முனைப்பாக உன்னைநான் பார்த் தெடுத்தேன் முகம்சுழிக்க
முடியாத வகையினிலே முயன்றுநான் எல்லாஞ் செய்தேன்
வினைப்பயனோ என்னம்மா உன்தலையில் கொள்ளிவைத்தேன்
வேதனையின் விளிம்பினிலே வெந்து வெந்து உருகுகின்றேன்

மகன் ஆனந்தமூர்த்தி பிரலாபம்
(இளைப்பாறிய உத்தியோகத்தர் நிலஅளவையாளர் திணைக்களம்.)

நொந்துமனம் நோன்பிருந்து நுகர்தவங்கள் பலவியற்றி
நோய்நொடிகள் வராது காத்துஎனை வளர்த்தெடுத்து
சிந்தை நிறை பாசமதில் சீராகவாழ வழிவகுத்த
செம்மைநிறை என்அம்மா சென்றுவிட்டாய் என்னைவிட்டு
முந்தை வினைப் பயனிதுவோ முதிர்ந்தாலும் கண்முன்னே
முகம்பார்க்க இருந்த அம்மா முடிவிட்டாய் உன்கண்ணை
அந்தோ! என் அம்மாவுடன் அழகுமுகம் பழகுமொழி
அனைத்தையுமே எங்கேநான் காண்பேனோ என்அம்மா!

மகள் கமலேஸ்வரி தர்மரத்தினம் புலம்பல்

கையிரண்டி லேந்திமடி மீது வைத்துக்
கனியமுத உண்டிதந்து வளர்த்தெடுத்தே
செய்யவுள்ள அத்தனையும் செய்து பார்த்துச்
சிந்தைநிறை வாழ்வுபெற வைத்த கோயில்

தூய்யவொரு துணையாக நீண்டகாலம்
துஞ்சாது உதவிநிற்பாய் என்றிருந்தேன்
வெய்யவொரு வேதனையின் விளிம்பினிலே
வெம் பியழ விட்டேனோ சென்றாய் அம்மா

ஆண்மருமக்கள் யோகேஸ்வரன் விசுவமடு, தர்மரத்தினம் ஓமான்
இரங்கல்

பாசத்திற் தாய்போலப் பண்பினோடு
பழகியஎம் மாமியெமைப் பிரிந்து சென்ற
மோசமிகு துயர்மண்ட மனது வெம்பி
மூள்கின் றோம் துயர்கடலில், குடும்பம் தாங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசத்தை நினைந்துருகி நெட்டுயிர்த்து
நிறையன்பு சொரிந்த பண்பை எண்ணி யெண்ணி
மாசற்ற புன்முறுவல் வதனந் தன்னை
மனத் திருத்தி மாய்கின் றோம் விதியோ மாமி

பெண் மருமக்கள் தவலட்சுமி, மகாதேவி பிரலாபம்.

---

மருமகளோ நாமுமக்கு மக்களன் றோ மாமி
மாற்றரிய துன்பமதில் மூள்கவைத்து
சிறு நோயால் மிகவாடிப் பிரிந்தாய் ஐயோ
செயலிழந்தே சிந்தைமிக கலங்கி நின் றோம்
ஒருது ணையாய் உதவிநின்ற உத்தமியே மாமி
ஒருநாளுஞ் சினந்தறியாப் பண்பை யெண்ணி
உருகுகின்றோம் உள்ளமது உடைந்தே கண்ணீர்
உகுக்கின்றோம் உள்ளமட்டும் மறக்கலாமோ?

உடன் பிறந்த சகோதரி ந.இரத்தினம் புலம்பல்

---

பொன் பெறலாம் பொருள் பெறலாம் போதுமட்டும்
புகழ் பெறலாம் பூதலத்தில் ஒருவயிற்றில்
ஒன் றாகப் பிறந்திங்கே உலவிநின்ற
உடன் பிறப்பை இழந்திட்டால் மீண்டொருகால்
என்றேனும் பெறலாமோ எம் சகோ தரியே
என் றென்றும் எமைநாடி ஓடிவந்து
நன்றாகக் கதைபேசி நலமே கேட்பாய்
நமன் வந்தான் இடையினிலே என் செய்வோமே

மைத்துனர் நா.நடராசா. இரங்கல்

---

உத்தமக் குணங்கள் கொண்ட உயர்தவ மைத்துனிக்கோ
இத்தகை நிலைவந் துற்ற தென் னினிச் செய்வோம் எங்கள்
மைத்துனி உன்னைப் பிரிந்து மனமது அலைபாய் வேக
கத்தியே கதறுகின்றோம் துயர் தவிர் வழிகா ணோமே.

மைத்துனி சி.இரத்தினம்.

---

கண்டுவிட்டால் வாங்க வென்று அன்போடு கூவிக் கண்சிரிக்க
கொண்டவொரு பாசமுடன் குலவுசுக நலன்கள் கேட்டு
அண்டியிருந் தாதரித்த மைத்துனியே ஆவி பிரிந்த
மண்டு துயர் மாறாது மனக் கவலை தீர்வ தெப் போ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகள் ராஜ்குமார், வரதன், சுபாஜினி, சுமதி, சுதர்ஜன், பிரலாபம்

பிறக்கவைத்துப் பிரியமுடன் அரவணைத்துப்
பேணிக் காத்து வளர்த் தெடுத்த அம்மம்மா
உறக்கமின்றி எம்மையெல்லாம் பார்த் தெடுத்து
உயிர்க்குயிராய் தழுவிநின்ற அம்மம்மா
இறந்த தென்ற இடியேறுச் செய்தி கேட்டு
இரங்கியிங்கே இருந்தழுது வெம்பு கின்றோம்
பிறவியினிப் போது மென்றோ பிரிந்தாயந்தோ
பெருகுமெங்கள் துயர்தீர்த லென்றோ சொல்வாய்

பேரப்பிள்ளைகள் சத்தியசீலன், பத்மசீலன், தாட்சாயணி புலம்பல்

மழலை மொழி கேட்டு மடிமீது தானிருத்தி
பழங் கதைகள் பலகூறிப் பரிந்தெம்மை வளர்த்திட்ட
பழகுவதற் கினிய எங்கள் அப்பம்மா பிரிந்த துயர்
அழுதாலும் தீராது தொழுதாலும் மாறாது ஆற்றொணாதே

பெறாமக்கள் பிரலாபம்

பெற்ற வொரு தாயெனவே பேரன்பு பூண்டு
பிணைந்திருந்த பெறாத் தாயார் மாண்டசேதி
பற்றுமொரு துயர்க்கடலில் மூழ்கவைத்தே
கதறியழு தேங்குகின்றோம் பாவியாமே
குற்றமெது புரிந்தாலும் கண்டிப்போடு
கூறுமறி வதனையினி யாரே சொல்வார்
பற்றியெரி நெருப்பினிலே உடலம் நீறாய்ப்
பரவிபதைக் காணவிதி வைத்தாயந்தோ

மறு மருமக்கள் புலம்பல்

அன்பு சொரி கின்ற முகம் ஆசைப் பேச்சு
ஆதரிக்கும் தாயெனவே திகழ்ந்த மாமி
இன்பமுடன் இன்சொல்லைச் சிரித்துச் சிரித்து
எடுத்துரைக்கும் வார்த்தைகளை என்று கேட்போம்
துன்பமிதை தந்துமறைந் திட்டதேனோ?
துயர் மேவத் துடிக்கின்றோம் துவழுகின்றோம்
முன்பு புரிந் திட்டதவக் குறைவோ இந்த
மோசமிங்கு வந்ததுவே மாமி அந்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றஞ் சூழல் பிரலாபம்

மனைதேடி வந்துவிட்டால் மலர்ந்தவொரு வதனமோடு
மனந் திறந்து பேசியெமை மகிழ்வோடு உபசரித்து
சினமின்றிச் சிரிப்போடு சிறந்த புத்தி மதி கூறி
சீலமொடு பண்பூட்டிச் சீருதவி நல்கிநின்று
மனமொன்றிப் பழகுமயில் மாதரசி பொன்னம்மா
மாண்டாளென் றறிந்திந்த மானிலமே அழுததம்மா
அணைந்ததுவே சோதியின்று அழிந்ததுவே அவருடலம்
அவராத்மா சாந்தியுற அமலனடி போற்றுதுமே.

✠

## திருப்பொற்சுண்ணம்.

முத்து நற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நற் றீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறன் அம் மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
போற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்து நாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அத்தரர் கோனையன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமையான் கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் இடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம் பொற்கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே

அறுகெடுப் பாரயனு மரியும்
அன்றி மற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்த வில்லி
திருவேகம் பன்செம் பொற்கோயில் பாடி
முறுகற் செவ்வாயினீர் முக்கணப்பற்
பாடப் பொற் சுண்ண மிடித்து நாமே

உலக்கை பலவோச்சுவர் பெரியர்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டு கொண்டு
நாண் மலர் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப வார்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே

வாள் தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவள் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந் திலங்கச்
சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாள் கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந் துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணமிடித்து நாமே

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தஞ் சிவனொடும் ஆட ஆட
செய்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப் பொற்சுண்ண மிடித்து நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
ஆகப்படுத் தாட்கொண் டருமை காட்டு
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்றொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ண மிடித்து நாமே

மின்னிடை செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகை பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடை கேள்வன் மகன் தகப்பன்
தமயன் எம்மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்ற சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ் தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந் துடிப்பச்
சேயிழை யீர் சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா விரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்றே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந் தாற்
தேனை பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ண மிடித்து நாமே

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க ணாவிலுங் கண்டறியாச்
செம்மலர் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய் சுண்ணமிடித்து நாமே

தேனக மாமலர்க் கொன்றை பாடி
சிவபுரம் பாடித் திருச் சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
மூனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணமிடித்து சாமே

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனை பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
ஈசற்குச் சுண்ணமிடித்து நாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளாயினார்க்குத்
துன்பமுமாய் இன்ப மாயினார்க்கு
பாதியுமாய் முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினார்க்
காதியும் அந்தமு மாயினார்க்
காடப் பொற் சுண்ணமிடித்து நாமே.

*

## தேற்றம்

--------

ஆறிலுஞ் சாவேயன்றி நூறிலுஞ் சாவேயாகும்
மாறிடும் இந்தமாய வாழ்வினை மதித்திடாதீர்
கூறிடுஞ் பொன்னம்மாவுங் கூடிய ஈசன்பாதம்
பீற்றிடுந் துன்பமாற்றிப் பிரானடி போற்றுவீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி திருமதி பொன்னம்மா மூத்ததம்பி அவர்களின் இறுதி ஈமக்கிரியையின்போது வருகை தந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உடனிருந்து உதவியோருக்கும் இன்றைய அந்திய அஸ்திக்கிரியைகளின் போது சமூகமளித்தோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

துன்னாலை
கரவெட்டி
1998.04.16

இவ்வண்ணம்
மக்கள், மருமக்கள்,
பேரர், குடும்பத்தினர்

---

( S ) RONEO Computer unit, Viyaparimoolai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org